2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(அஅ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*